**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டுர்,**
**தேதி: 13.03.2026**
**OS. No. 142/2016**
**வழக்கு சாட்சி PW.1–செல்வம் , த/பெ.ஜெகநாதன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் ஓரளவுக்கு படிப்பேன். என் நிரூபண வாக்குமூலத்திலுள்ள விவரங்களை நான் படித்து பார்த்தேனா என்றால் ஓரளவுக்கு பார்த்தேன், மீதம் என் வழக்கறிஞர் சொன்னார். நான் 30 வருடங்களாக கோயம்புத்தூரில் காரைமடையில் குடியிருந்து வருகிறேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் கோனூர் கிழக்கு கிராமத்தில் குடியுள்ளதாகவும் சொல்லியுள்ளது தவறு என்றால் நான் அவ்வப்போது வந்து செல்வேன். எனக்கு 53 வயது என்றும் தவறாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கோனூரில் குடியில்லாததால் தான் வீட்டு கதவு எண் முகவரி ஆகியவை முழுவதும் கொடுக்கவில்லை என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன், அவரை தான் கேட்கவேண்டும்.

2) நடுதம்பி (எ) நாராயணசாமி என் தாத்தா என்றால் சரிதான். என் தாத்தாவிற்கு 3 ஆண் மற்றும் 3 பெண் வாரிசுகள் அவர்கள் பெயர்கள் பெருமாள், கிருஷ்ணன், வெங்கடாஜலம், லட்சுமியம்மாள், கிருஷ்ணம்மாள் (எ) வெங்கடம்மாள், மரகதம் ஆகும். அதில் தற்போது பெருமாள், கிருஷ்ணன், லட்சுமியம்மாள், கிருஷ்ணம்மாள் (எ) வெங்கடம்மாள் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள். மேற்கண்ட கிருஷ்ணன் அவர்களின் பிள்ளைகள் பிரதிவாதிகள் ரவி, புருஷோத்தமன், சந்திரன், மைனா, தேன்மொழி ஆகும். என் தாத்தா ச.எண்.696/3ல் என் தாயார் கிருஷ்ணம்மாள் (எ) வெங்கடம்மாளுக்கு 50 சென்ட் நிலம் செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். ஆனால் பட்டாவானது 48–1/2 சென்ட் நிலத்திற்கு மட்டும் தான் கொடுத்தார்கள். அந்த சமயத்தில் என் பாட்டி மாரியம்மாளை கார்டியனாக வைத்து தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தார்.

3) மேற்கண்ட தானசெட்டில்மெண்டானது என் தாயார் தன் வாழ்நாள் வரை எவ்வித வில்லங்கமும் செய்யாமல் அந்த சொத்தை அனுபவித்து கொள்ளலாம் என்றும், அதன் பிறகு என் தாத்தாவின் மகன்களான பெருமாள், கிருஷ்ணன் மற்றும் வெங்கடாஜலம் ஆகியோருக்கு சென்றடைய வேண்டும் என்று நிபந்தனையோடு வழங்கப்பட்டது என்றால் சரிதான், என் தாயாருக்கு கண் பார்வை குறைவாக இருந்ததால் அவருக்கு திருமணம் ஆகுமோ, ஆகாதோ என்ற காரணத்தால் அவ்வாறு வழங்கப்பட்டது. என் தாத்தா எந்த வருடம் இறந்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. என் தாயார் இறந்து சுமார் 5 வருடம் ஆகிறது. என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது ஆண் வாரிசுகளான பெருமாள், கிருஷ்ணன் மற்றும் வெங்கடாஜலம் ஆகியோர்கள் 1984 ல் பதிவு செய்யப்பட்ட பாகபத்திரம் மூலம் பிரித்து கொண்டனர் என்றால் சரிதான், என் தாயாருக்கு செட்டில்மெண்ட் மூலம் வழங்கப்பட்ட சொத்தை தவிர மற்ற சொத்துக்களை பொறுத்து ஏற்படுத்திக்கொண்டனர்.

4) என் தாயாருக்கு நிபந்தனையுடன் தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்த காரணத்தினால் தான் அந்த சொத்தை பாகபிரிவினை பத்திரத்தில் காட்டவில்லை என்றும், அவரையும் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான், என் தாயாருக்கு எந்த நகையும் கூட வழங்கப்படவில்லை, அதனால் தான் தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தார்கள். நான் மேற்கண்டவாறு சொல்வது போல் நடந்திருந்தால் என் தாயாரையும் பாகபிரிவினை பத்திரத்தில் தரப்பினராக காண்பித்து அவருக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் நிபந்தனையுடன் வழங்கப்பட்ட சொத்தை அவருக்கு பாகமாக அதை ஒதுக்கியிருப்பார்கள் என்றும், நான் தற்போது வழக்கிற்காக மேற்கண்டவாறு நடக்காத விஷயத்தை தெரிவிக்கிறேன் என்றால் சரியல்ல. இல்லையெனில் என் தாயர் பெயரில் விடுதலை பத்திரமாவது எழுதி கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல, பட்டா என் தாயார் பெயரில் கொடுக்கப்பட்டதால், அதன் அடிப்படையில் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் என் தாயாருக்கு ஒதுக்கிவிட்டார்கள். அந்த பஞ்சாயத்தில் ஏதேனும் அது தொடர்பாக ஆவணங்கள் எழுதப்பட்டதா என்றால் இல்லை. அந்த பஞ்சாயத்து யார் பேசினார்கள், யார் யார் கலந்துகொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5) எனக்கு 1990ல் திருமணம் நடந்தது. திருமணம் நடந்தபிறகு கோயம்புத்தூர் காரமடையில் கார்பெண்டர் வேலைக்கு சென்றுவிட்டு, அங்கேயே வசித்து வந்தேன் என்றால் சரிதான், அவ்வப்போது ஊருக்கும் வருவேன். என்னுடைய அடையாள அட்டைகள், குடும்ப அட்டை ஆகியவை அனைத்தும் கோயம்புத்தூர் முகவரியில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் ஊருக்கு வரும்போதெல்லாம் என் தாயாரை வந்து பார்த்து கொள்வேன், என் தாயாரும் அவ்வப்போது கோயம்புத்தூருக்கு வந்து என்னுடன் தங்கி செல்வார். என் தாயார் தனிப்பட்ட முறையில் எந்த கடனும் வாங்கவில்லை என்றால் அக்கம்பக்கம் உள்ளவர்களிடம் கடன் வாங்குவார், அதனால் தான் அவருக்கு ரூ.78,000/-ம் கொடுத்து தாவா சொத்தை என் பெயரில் கிரையமாக எழுதி வாங்கிக்கொண்டேன்.

6) தாவா சொத்தில் வீடு ஏதேனும் உள்ளதா என்றால் ஓட்டு வீடு உள்ளது. அதன் கதவு எண் தெரியுமா என்றால் தெரியவில்லை, வரி ரசீதுகள் மற்றும் மின் இணைப்பு ரசீதுகள் ஆகியவற்றை என் வீட்டில் வைத்துள்ளேன். அந்த வீட்டில் தற்போது யாரும் இல்லை என்றால் என் தாயார் இருந்தவரை இருந்தார், நான் அவ்வப்போது வந்து தங்குவேன். வா.சா.ஆ.3 கிரைய பத்திரம் தான் என் தாயாரிடமிருந்து நான் வாங்கியது என்றால் சரிதான். அதில் என் தாயார் முகவரியாக கோனூர் கிராமம், பாரதி நகர், க.எண்.2/49 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கோயம்புத்தூர் பெரியநாயக்கன்பாளையம், க.எண்.117PRA என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் சொத்து விவரத்தில் க.எண்.7/214, வரி விதிப்பு எண்.1342 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7) மேற்படி ஆவணத்திலேயே தாவா சொத்தில் குடியிருப்பதாக காட்டாமல் வேறு முகவரியில் குடியிருப்பதாகத்தான் காட்டப்பட்டுள்ளது என்றால் அதில் ஏதோ தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதே ஆவணத்தில் குடியிருப்பு வீடு எதுவும் சொத்து விவரத்தில் காட்டவில்லை என்றும், பண்ணை உபயோகத்திற்காக விதைகள், தானியங்கள், உரங்கள் போன்றவை வைப்பதற்காகவும், விவசாய சாதனங்கள் வைப்பதற்காகவும் உள்ள வில்லை வீடு என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் தான்

என் தாயார் இருந்தார். மேற்கண்ட கிரைய ஆவணம் எழுதப்பட்ட தேதியிலோ, அதற்கு முன்னதாகவோ, அந்த வில்லை வீடு பழுதடைந்திருந்தது என்றால் சரியல்ல. நானும் அதில் குடியில்லை என்றும், என் தாயாரும் அதில் குடியில்லை என்றால் சரியல்ல. நான் தற்போது தாவா சொத்தில் குடியிருப்பதற்கோ, விவசாயம் செய்வதற்கோ ஆதாரமாக ஏதேனும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதில் நாங்கள் விவசாயம் செய்யவில்லை, அவ்வப்போது வந்து மட்டும் செல்வோம். சுற்றியுள்ளவர்கள் எங்களை விவசாயம் செய்ய விடுவதில்லை. நான் சொல்வது தவறு என்றும் என் தாயார் இறந்தபிறகு நிபந்தனையுடன் வழங்கப்பட்ட செட்டில்மெண்ட் முடிவுக்கு வந்துவிட்டது என்றும், அதனால் என் தாத்தாவின் ஆண் வாரிசுகளின் பிள்ளைகளான 4 முதல் 6 பிரதிவாதிகள் தான் தாவா சொத்தின் அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 27.03.2025ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.